ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2085/19 - 2018 අගෝස්තු මස 23 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.08.23

2085/19 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பி.15/2014

2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டம்

2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 58 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 39 ஆம் பிரிவின் கீழ் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

சஜித் பிரேமதாச,
வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர்.

கொழும்பு,
2018, ஓகத்து 22.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள், 2018 ஆம் ஆண்டின் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி (வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்களைத் தற்காலிகமாகப் பதிவுசெய்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இலங்கையில் ஏதேனும் அடையாளம் காணப்பட்ட நிர்மாண வேலையில் ஈடுபடுவதற்கான தற்காலிகப் பதிவொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு விரும்புகின்ற ஒவ்வொரு வெளிநாட்டு ஒப்பந்தக்காரரும், (இதனகத்துப்பின்னர் இவ்வொழுங்குவிதிகளில் “ அதிகாரசபை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் அத்தகைய வெளிநாட்டு ஒப்பந்தக்காரராகப் பதிவுசெய்து கொள்வதற்கென அவ்வதிகாரசபையினால் தேவைப்படுத்தப்படுகின்றவாறான எவையேனும் விபரங்களுடன் சேர்த்து அத்தகைய கருத்திட்டம் ஒவ்வொன்றுக்குமான விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

3. அத்தகைய பதிவுக்கான நடவடிக்கைமுறையானது இதற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

4. எவரேனும் வெளிநாட்டு ஒப்பந்தக்காரருக்கு, அவர் இதற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறாக ஏற்புடையற்பாலதான பதிவுக்கட்டணத்தைச் செலுத்துவதன்மேல், பதிவிலக்க

1A - PG 4179 - 507 (2018/08)

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மொன்று குறித்தளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் ஒவ்வொரு கருத்திட்டத்துக்குமான தற்காலிக பதிவுச்சான்றிதழொன்றும் வழங்கப்படுதல் வேண்டும். இது, அத்தகைய சான்றிதழில் குறித்துரைக்கப்பட்டுள்ள வாறான காலப்பகுதியொன்றுக்குச் செல்லுபடியாதல் வேண்டும்.

5. அதிகாரசபையிடம் பதிவுசெய்யப்பட்ட வெளிநாட்டு ஒப்பந்தக்காரர் ஒவ்வொருவரும் அத்தகைய பதிவு முடிவுறுந்தேதிக்கு ஆகக்குறைந்தது பதினான்கு நாட்களுக்கு முன்னர், அத்தகைய சான்றிதழைப் புதிப்பிப்பதற்காக இதற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான புதுப்பித்தற் கட்டணத்துடன் சேர்த்து அதிகாரசபைக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

6. இவ்வொழுங்குவிதிகளில் - "அடையாளம் காணப்பட்ட நிர்மாண வேலை" என்பது, 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்திலுள்ளவாறாக அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## முதலாம் அட்டவண

வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்களைப் பதிவுசெய்வதற்கும் புதுப்பிப்பதற்குமான நடவடிக்கைமுறை

1. (பதிவுசெய்வதற்கான/ பதிவைப் புதுப்பிப்பதற்கான) விண்ணப்பப் படிவங்களை அதிகாரசபையில் பெற்றுக்கொள்ளலாம். முறையாக நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் பின்வருவனவற்றுடன் சேர்த்து அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்படுதல் வேண்டும் :-

(அ) ஒப்பந்தத்தை வழங்குவதற்கு உட்கருதுகின்ற, வாடிக்கயாளரிடமிருந்தான கடிதம்;

(ஆ) சான்றுப்படுத்தப்பட்ட கம்பெனித்தோற்றுருவும் கம்பெனியின் நிதிக்கூற்றும்;

(இ) உயர்தொழிலர்களினதும் வேறு பணியாட்டொகுதியினரினதும் விபரங்கள்;

(ஈ) கடந்தகால செயல்நிறைவேற்றுகை பற்றிய விபரம்;

(உ) இறக்குமதி செய்யப்பட்ட பொறித்தொகுதி மற்றும் எந்திரத்தொகுதி பற்றிய விபரங்கள் அத்துடன்;

(ஊ) அதிகாரசபையினால் தேவைப்படுத்தப்பட்டவாறான ஏதேனும் வேறு தகவல்.

2. விண்ணப்பகாரர், பதிவொன்றைப் பெற்றுக் கொள்ளவதற்கு அவசியப்படக்கூடியவாறான எல்லாத் தேவைப்பாடுகளையும் பூர்த்திசெய்திருப்பின், அதுபற்றி விண்ணப்பத்தேதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் அவ்விண்ணப்பகாரருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

3. இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான இயைபான பதிவுக்கட்டணத்தை/ புதுப்பித்தற் கட்டணத்தைச் செலுத்துவதன்மேல் விண்ணப்பகாரருக்கு பதிவுச்சான்றிதழ் வழங்கப்படுதல் வேண்டும்.

4. பதிவானது, பின்வரும் காரணங்களுக்காகப் புதுப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய காரணங்கள் சான்றிதழ் முடிவுறுந்தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்கு முன்னர் அதிகாரசபைக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும் :

(அ) கருத்திட்டத்தின் நோக்கெல்லையிலான மாற்றமும் ஒப்பந்தப் பெறுமதியின் அடுத்துப்பின்னரான அதிகரிப்பும்

(ஆ) அத்தகைய கருத்திட்டத்தைப் பூர்த்திசெய்யும் பொருட்டு கருத்திட்டத்தின் காலத்தை நீடிப்பதற்கான அவசியம்.

## இரண்டாம் அட்டவணை

**பதிவுக்கான கட்டணங்கள்**
இயைபான கருத்திட்டத்தின் ஒப்பந்தப்பெறுமதியின் 0.01%

**பதிவைப் புதுப்பிப்பதற்கான கட்டணங்கள்**
கருத்திட்டத்தின் நோக்கெல்லையிலான மாற்றமும் ஒப்பந்தப்பெறுமதியின் அடுத்துப்பின்னரான அதிகரிப்பும் என்னும் விடயத்தில், இயைபான கருத்திட்டத்தின் ஒப்பந்தப்பெறுமதியின் வேறுபாடு காரணமாக உறப் படுகின்ற மேலதிகப் பெறுமதியின் 0.01% (ஒப்பந்தப் பெறுமதி பற்றிய வேறுபாடு இல்லாதவிடத்து, புதுப்பித்தற் கட்டணம் ஏற்புடையதாதல் ஆகாது.

09 - 130

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.